Rajah Serfoji Government College Thanjavur

* 234 Q.—THIRU M. ARUMUGASWAMI (on behalf of Thiru G. Swaminathan): Will the Hon. the Minister for Education be pleased to state whether the service of the Management staff of Rajah Serfoji Government College, Thanjavur, before the take-over of the College by the Government will be taken into account for the purpose of calculating their pension on superannuation?

தஞ்சாவூர் ராஜா சரபோஜி அரசினர் கலைக்கல்லூரி

திரு. எம். ஆறுமுகசாமி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தஞ்சாவூர் ராஜா சரபோஜி அரசினர் கலைக்கல்லூரியின் நிர்வாகத்தை அரசு மேற்கொள்ளுமுன்னர் அக்கல்லூரி நிர்வாகப் பணியாளர் ஆற்றிய பணிக் காலம் அவர்கள் வயது முதிர்வு ஓய்வு பெறுவதன் மேல் அளிக்கப்படும் ஓய்வூதியத்தைக் கணக்கிடுவதற்குக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ராஜா சரபோஜி கல்லூரி 1—7—1965-க்கு முன்னல் (அரசினரால் எடுத்துக்கொள்ளப்பட்ட நாள்) மேலாண்மை (Management.) யின் கீழ் இயங்கி வருகையில் அக் கல்லூரியில் பணியாற்றி வந்த, ஊழியர்களின் பணி நாட்களை, குடிமுறைப் பணியாளர் ஒழுங்குமுறை விதிகள் Civil services Regulations... 361-ன் படி ஓய்வூதியத்துக்கு கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

Municipal High School, Coonoor

* 235 Q.—THIRU L. BALARAMAN (on behalf of Thiru V. Isvaramurti): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Government have taken over the Municipal High School, Coonoor, in the Nilgiris District; and

(*b*) if so, the wing to which the school belongs?

நகராட்சி உயர்நிலைப் பள்ளி, குன்னூர்

திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூரில் உள்ள நகராட்சி உயர்நிலைப் பள்ளி நிர்வாகத்தை அரசு எடுத்துக்கொண்டுள்ளதா?

1974 மார்ச் 28]

(இ) ஆமெனில், எந்தப் பிரிவில் அப்பள்ளி சேர்ந்துள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இன்னும் முடிவெடுக்கப்படவில்லை.

திரு. அ. அய்யணன் அம்பலம் : தலைவர் அவர்களே, எல்லா மாவட்டங்களிலேயும் உள்ள நகர சபைகள் நடத்தும் உயர்நிலைப் பள்ளிகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ள ஏதாவது உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எல்லா உயர்நிலைப் பள்ளிகளையும் எடுத்துக்கொள்கிற நிலையில் இல்லை. பல நகராட்சி மன்றங்கள் உயர்நிலைப் பள்ளிகளை நடத்த இயலவில்லை, போதுமான அளவுக்கு நிதிவசதி இல்லை என்று சொன்னதன் அடிப்படையில், மிக மிக பலகீனமான நகராட்சி மன்றங்களிலேயிருந்து துவக்கி சென்ற ஆண்டு சில உயர்நிலைப் பள்ளிகளையும், வருகின்ற ஆண்டில் 10 உயர்நிலைப் பள்ளிகளையும் நாம் எடுத்துக் கொள்ளுகிற நிலையில் இருக்கின்றோம். தாங்களே நடத்த இயலும் என்று எந்த நகராட்சி மன்றங்கள் சொல்கின்றனவோ, அவற்றினுடைய உயர்நிலைப் பள்ளிகளை எடுத்துக்கொள்வதாக இல்லை. ஆகவே எவை எவை நடத்த இயலாது என்று கூறுகின்றார்களோ அவைகளை மட்டும் இப்பொழுது எடுத்துக்கொள்ளும் முயற்சியில் இருக்கிறோம்.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, குன்னூரிலே உள்ள நகராட்சி உயர்நிலைப் பள்ளி நிர்வாகத்தை எந்தப் பிரிவிலே எடுத்துக்கொள்வது என்று முடிவு எடுக்கப்படவில்லை என்று கல்வி அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படி முடிவு எடுக்கப்படும்போது, ஆசிரியர்களின் ஊழிய காலம், முன் உரிமை முதலியவை பாதிக்கப்படாத வகையில் வழங்கப்படும் நிலையில் முடிவு எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1—4—70 வரையிலும் 'பி' விங் என்றும், அதற்குப் பிறகு 'ஏ' விங் என்றும் வைத்துக் கொண்டிருக்கிறோம். இந்தப் பள்ளிகளையெல்லாம் 'சி' விங் என்று வைக்கும் படி பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே இது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போன்று, அவர்களை எந்த விங்கிலே சேர்த்தாலும் அவர்களை எந்த நிலையிலே கொண்டுபோய் வைப்பது என்பதிலே எல்லாம் பிரச்சினைகள் வரும். அவைகளை ஆராய்ந்து யாருடைய உரிமையும் பாதிக்காத அளவுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.